செ.வெ.எண்:15 நாள்:06.10.2018

## பத்திரிகைச் செய்தி

### கடலூர் மாவட்டம் திட்டக்குடி,வேப்பூர் மற்றும் விருத்தாச்சலம் பகுதியில் உள்ள நீர்தேக்கங்களை மாவட்ட ஆட்சித்தலைர்திரு.வெ.அன்புச்செல்வன்,இ.ஆ.ப.,அவர்கள் பார்வையிட்டுஆய்வுசெய்தார்.

-----

கடலூர் மாவட்டம் திட்டக்குடி, வேப்பூர் மற்றும் விருத்தாச்சலம் பகுதியில் உள்ள நீர்தேக்கங்களை மாவட்ட ஆட்சித்தலைர் திரு.வெ.அன்புச்செல்வன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.10.2018) பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

வேப்பூர்வட்டம், மே.மாத்தூர் அணைக்கட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனை தொடர்ந்து திட்டக்குடி வட்டம் தொழுதூர் அணைக்கட்டு பகுதியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்னர் திட்டக்குடி வட்டம் வெள்ளிங்டன் நீர்தேக்கம், பெலாந்துறை நீர்தேக்கத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன், இ.ஆ.ப.,அவர்கள் பார்வையிட்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

இம்மாவட்டத்தில் 274 பகுதிகள் வெள்ளம் சூழக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் 13 துணை ஆட்சியர் அளவில் மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டு இம்முன்னெச்சரிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ளஅறிவுறுத்தப்பட்டுள்ளது. இம்மண்டல அலுவலர்கள் அந்தந்த பகுதிகளில் முகாமிட்டு பணிகளை மேற்கொள்வார்கள். மேலும், கூடுதலாக மாவட்ட வருவாய் அலுவலர் அளவில் இப்பணிகளை கண்காணிக்க கண்காணிப்பு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், 28 படகுகள் மற்றும் 56 நீச்சல் வீரர்கள் தயார்நிலையில் உள்ளனர். மாவட்டத்தில் 46 காவல் நிலையங்களில் உள்ள அனைத்து காவலர்களும் மற்றும் மாநில பேரிடர் மீட்புக் குழுவில் பயிற்சிபெற்ற 71 காவலர்களும் தயார்நிலையில் உள்ளனர். மேலும் ஒரு படகு மற்றும் ஒரு ரப்பர் படகு ஆகியவை தலைமையிடத்தில் தயார் நிலையில் உள்ளன.

மாவட்டத்தில் உள்ள 15 தீயணைப்பு நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளது. 261 பணியாளர்கள் தற்போது தயார்நிலையில் உள்ளனர். 7 படகுகள் அதாவது கடலூர்-2, குறிஞ்சிப்பாடி-1, சேத்தியாத்தோப்பு-1, காட்டுமன்னார்கோயில்-1, சிதம்பரம்-1 ஆகிய இடங்களில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள வாலாஜா, பெருமாள் ஏரி, வீராணம் ஏரி ஆகிய நீர்நிலைகளின் கொள்ளளவு முழு அளவினை எய்துவதை பொதுப்பணித்துறை அலுவலர் மூலம் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு உபரிநீரினை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடுமின்சாரவாரியம்,மின் கம்பங்களில் உள்ளபழுதுநீக்கம் செய்துமின் கசிவு இல்லாமல் பார்த்துக்கொள்ளவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

5,867 மெட்ரிக் டென் அரிசி, 1,288 மெட்ரிக் டன் சர்க்க்ரை, 177 மெட்ரிக் டன் கோதுமை ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வானிபக் கழக குடோன்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுதவிர கடலூர் மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகளில் இம்மாதம் வழங்கப்பட வேண்டிய அத்தியாவசிய பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் 42 புயல் பாதுகாப்பு மையங்கள் உள்ளது. கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கால்நடைகளை பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்க தகுந்த இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கான தீவனங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறையின் மூலம் மருத்துவர்கள் குழு அமைக்கப்பட்டு அந்தந்த பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு மருத்து வசிகிச்சை அளிக்க தயார் நிலையில் இருக்க சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்ததப்பட்டுள்ளது. மேலும் சுகாதாரத்துறையில் தேவையானஅளவிற்கு மருந்துகள், மாத்திரைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்துத்துறை அலுவலர்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன் அனுமதியின்றிவிடுப்போ, தலைமையிடத்தைவிட்டு செல்லக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும்,கடலூர் மாவட்டத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை தொடர்பாக பொதுமக்களுக்கு உடனடியாக சேவைசெய்யும் வகையில் 34 ஆம்புலன்ஸ்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

வானிலை ஆராய்ச்சிமையத்தில் தெரிவித்துள்ளவாறு ரெட் அலர்ட் மூலம் தற்போது இம்மழையினால் கடலூர் மாவட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதால் பொதுமக்கள் அனைவரும் அச்சமோ, பீதியோ அடையவேண்டாம் எனகேட்டுக் கொள்கிறேன் எனசெய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தஆய்வில் மாவட்டவருவாய் அலுவலர்திரு.ராஜகிருபாகரன்,விருத்தாசலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சந்தோஷினிசந்திரா, விருத்தாச்சலம் செயற்பொறியாளர் திரு.கண்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வை.ரவிச்சந்திரன், உதவிசெயற்பொறியாளர் திரு.சண்முகம், உதவிபொறியாளர்கள் திரு.வெங்கடேசன், திருமதி.உமா, வேப்பூர் வட்டாட்சியர் திரு.என்.செந்தில்குமார், திட்டக்குடிவட்டாட்சியர் திரு.சத்தியன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**வெளியீடு: செய்திமக்கள்தொடர்புஅலுவலர்,கடலூர்.**